தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

துணர் ௪௫

விரோதிகிருது – ஆண்டு

1971 - 72

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

ஆசிரியர் :

செ. தனக்கோடி, பி. ஏ.,

உள்ளுறை

விரோதிகிருது ஆண்டு துணர் ௪௫ மலர் ௧-௰௨

(1971 - 72) பக்கம்

1 புத்தாண்டு வாழ்த்து 1
புலவர் ச. பாலசுந்தரம்

2 தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு 3, 67, 99, 130, 164, 196, 230, 261, 293, 324, 358, 387

3 ஈயும் ஏயும் 5

4 படர்க்கை இடப் பெயர்கள் 101

5 அகவன் மகன் 165

6 தெய்வச்சிலையார் உரைச் சிறப்பு 282

7 அலங்கடையும் இலங்கடையும் 373
டாக்டர் மோ. இசரயேல்

8 தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும் 12, 54, 92, 133, 176, 231
திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்

9 "அந்தணர்" என்னும் சொல்லின் பொருள் 18

10 இடைச் சொல்லின் இயல்பு 342
புலவர் சொ. சிங்காரவேலன், எம். ஏ., டிப் லிங்.

11 நாட்டுப் பாடல் 22, 48, 78, 113, 213, 240, 263, 295
பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எச்

12 கையறவு 26, 162, 323, 326

13 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் 27
திருமதி சாலினி இளந்திரையன்,
எம். ஏ. எம். லிட். டிப்யூ. என். அய் யூ.

14 நாடகக் கலை முன்னோடி 35, 69, 120, 183, 197
டாக்டர் சாலை. இளந்திரையன், பி. எச். டி

15 நகைச்சுவைக் குறிப்புகள் 42
பொழிலன்பர் சுவைக்க 226. 260

16 அரிசுடாட்டில் இலக்கணமும் இளங்கோவின் இலக்கியமும் 45
திரு. ஏ. சுப்பிரமணியம், எம். ஏ.

17 கண்ணகி கேட்ட நல்லுரை 60
திரு. கொ. சு. மகாதேவன், பி. எசி. எம் ஏ.

18 நெடுநல் வாடை 64, 86, 137

19 கம்பரின் நகைச் சுவை 220, 246, 277

20 தமிழ்த் தெய்வம் 307
திரு. K. சோமசுந்தரம், பி ஏ. பி. எல்.

21 அடிமை — திரு. ஆற்றலரசு 91

22 திருக்குறட் கருவூலம் 108, 147, 187, 204
நக்கீரன் வழியடிமை வித்துவான்
பி. மா. சோமசுந்தர முதலியார்

23 பொய்யடிமையில்லாத புலவர் யாவர் ? 126
திரு. அ. தட்சிணாமூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) பி. இடி.

24 தாயினுமினியன் 153
வி. ரூத்சாய்

25 குறுந்தொகை 26 ஆம் பாடல் 191
திரு. கு. திருஞானம், எம். ஏ.

26 கம்பன் கண்ட சமதர்மம் 232
திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.

27 பேச்சுத் தமிழில் வினையெச்சம் 270
டாக்டர் கி. கருணாகரன், எம். ஏ., பி. எச்டி.

28 மன்றல் வயது 290
புலவர் தே ப. சின்னசாமி

29 திராவிட மொழிக் குழு 304

30 பாவைப் பாட்டு 360
டாக்டர். சோ ந. கந்தசாமி, எம் ஏ. எம்லிட். பி எச்டி

31 ஏலாதி — திறனாய்வு 317, 327

32 இலக்கியத்தில் கொள்கை முழக்கம்
புலவர். தி. நா. அறிவு ஒளி

33 கிரானைட்டுப் பாறைகளின் தோற்ற வெப்பநிலை 335
திரு. இரா. இராமசாமி ;
மே. கி. இலக்குமி நாராயணன்

34 பொருத்தத்தில் பொலிந்த பொருளாழம் 347
திரு. இர குழந்தைவேலு, எம் ஏ

35 கொடுக்காய்ப்புளியும் குரட்டைப்புளியும் 353
திரு கு பூங்காவனம், பி ஏ, பெங்களூர்

36 குழந்தைகள் இல்லம் திறப்பு விழா 163
இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் 175

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி அறிவியல்
ஆய்வுக் கூடத் திறப்பு விழா 195. 359

கலைமகள் விழா 228

37 மதிப்புரைகள் 229, 384, 385

38 அலங்கடையும். இலங்கடையும் 373
டாக்டர் மோ. இசரயேல்

39 இலக்கியத்தில் கொள்கைமுழக்கம் 379
புலவர். தி. நா. அறிவுஒளி

40 உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி 386
மாாணவர் இலக்கிய மன்ற 31-ஆம் யாண்டு நிறைவு விழா

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௨௫	திருவள்ளுவர் யாண்டு ௨௲௨ விரோதிகிருது, சித்திரை (1971 — ஏப்பிரல் — மே)	மலர் ௧

புத்தாண்டு வாழ்த்து

1 தேமாந் தளிர்க்கவரி சில்லென்று வீசநறும்
பூமா தவித்தவிசு போற்றியிடக் — கோமாறன்

2 தென்பொதியச் சந்தனக்காத் தேங்கித் தமிழ்தோய்ந்து
முன்புவரும் தென்றல் விசிறியிடப் — பொன்பொலியும்

3 கொன்றைநறுந் தார்பூட்டக் கோலக் கொடிமுல்லை
முன்றி லிருந்து முறுவலிப்ப — வென்றிமிகு

4 மாரவேள் உள்ளம் மகிழஇள வேனிலெனும்
தேரதனில் ஏறித் திகழ்வென்றிப் — பேருடைய

5 ஆடுகமழகத்தில், ஆளுந் திருவெல்லாம்
பாடுபெறக் கொண் டொளிசெய் பண்பாலே—நாடிவந்து

6 செங்கதிரோன் கைப்பிடிக்கச் சீர்பெற் றுலகுமகிழ்
பொங்கவரும் சித்திரைப் பேர்ப்பூங்கோதை—திங்களுக்குள்

7 தித்திக்குந் திங்களவள் தெய்வ நலங்கமழும்
முத்தமிழ்போல் முக்கனியுந் தந்துவக்கும்—சித்திரையாள்

8 வீறுபெற வெய்யோன் விருப்பமிகு காதலினால்
பேறுமிகும் பெண்ணரசி பெற்றளித்த — ஆறிரண்டு

9 கொள்ளுமகவைக் குலமகவே! மன்பதையோர்
உள்ளும் புறமும் உவகை பெறத் — துள்ளிவரும்

10 வித்தகர்கள் போற்றும் விரோதி கிருதென்னும்
புத்தாண்டே இன்பப் பொருளுருவே — இத்தரையில்

11 காயும் வறுமை கடும்பஞ்சம் பொல்லாங்கு
தீய அறியாமை வன் செயல்கள் — மாயப் பொய்

12 வஞ்சம் கொடுமை வலிவழக்குக் கையூட்டு
நஞ்சனைய சோம்பல் நடுவன்மை — விஞ்சகின்ற

13 தீயொழுக்க மெல்லாம் திகைத்தஞ்சிப் போய்மாயத்
தூய பகைச்செயலைத் தோளேற்று — நேயமுற

14 வந்தெமக்கு வாழ்வு வழங்கஒளிர் புத்தாண்டே!
செந்தமிழால் வாழ்த்தி வர வேற்கின்றோம் — நிந்தனைசேர்

15 வீண்செயலுக் கெல்லாம் விரோதிகிரு தாதலினால்
மாண்புகொள வாழ்த்திவர வேற்கின்றோம் - கேண்மைவளர்

16 தெய்வப் புலவன் திருவள்ளு வன்நெறியால்
உய்ந்திவ் வுலகம் உவந்தோங்க — மெய்வந்த

17 செந்தமிழால் எட்டுத் திசைக்கும் நிழலளிக்க
முந்து தமிழ்ப்பொழிலின் மொய்ம்போங்கச் — சிந்தனையால்

18 வல்லதமிழ் நாவலர்செம் பாவலர்தம் வாழ்வோங்க
மல்லல் தருங்கலைகள் மாண்போங்கப் — பல்வளங்கூர்

19 கல்வி மலர் பூத்துக் கடமைக்கிளை தழைத்து
நல்லொழுக்கம் முற்றி நனிபழுத்துச் — செல்வமிகு

20 வேளாண்மை ஓங்கி விளக்கமுறச் செய்தொழில்கள்
தாளாண்மை யாலே தழைத்தோங்க — நாளாண்மை

21 பூத்துவரும் நல்லாண்டே "பொலிக பொலிக" என
ஏத்துகின்றோம் வாழ்த்தி இனிது.

புலவர் ச. பாலசுந்தரம்,
பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

தமிழ்மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

தமிழ் மொழி தனிமை, செம்மை ஆகிய உயர்பண்புகளை யுடைய மொழியாகும் பிற நாட்டவரும் தமிழ் மொழியின் செம்மையினை உணர்ந்து அதற்கு ஏற்ற சிறப்பினை இப்போது அளித்து வருகின்றனர். எனினும், இன்றைய நிலையில் சிந்தித்துப் பார்த்தால் தமிழ்மொழி உலகத்தின் உயர்மொழிகளில் ஒன்றாகத் தொடர்ந்து இருந்துவர வேண்டுமாயின் பல துறைகளில் வளர்ச்சி பெற வேண்டும். அறிவியல் துறையில் பெரிதும் வளரவேண்டும். மற்றொருபுறம் இடைக்காலத்தில் தமிழ் மொழிக்குற்ற சீர்குலைவைச் செப்பனிடவேண்டும். ஆங்கிலம் ஆரியம் முதலிய பிறமொழிச் சொற்கள் கலந்து தமிழ் மொழியின் தனிமையும் இனிமையும் ஒருவாறு சிதைவுற்றுள்ளன. தமிழன்னைக்குப் புதிய அணிகலன்கள் பூட்டும் பணி ஒருபுற மிருக்க, அவ்வன்னையின் மெய்யில் தோற்றுவிக்கப்பட்ட புண்களைப் போக்க வேண்டியது இன்றியமையாதது. தமிழ் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பேசும் தமிழ் மொழியில் பல பிற மொழிச் சொற்கள் பரவலாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழ் மொழி தனித்தியங்கும் தன்மையும் செம்மை உடைத்து என்றும் பறைசாற்றும் நாமே வழக்கில் பிறமொழிச் சொற்களைப் பேசி வந்தால் எங்ஙனம் பொருந்தும்?

> தமிழினைப்போல் சிறந்த மொழி தரணியிலே கண்டதில்லை.
> தமிழ்க்கொலையில் தலைசிறந்தார் தமிழரைப்போல்
> எவருளரே!

என்று உள்ளம் நொந்து கேட்டார் தமிழ்த் தென்றல், திரு. வி. க. அவர்கள். அந்த அளவுக்குக் கற்றவரும் கல்லாதவரும் மொழிக்கொலை செய்கின்றனர். பிறமொழிச் சொற்களைக் கையாண்டு வந்தால் தமிழில் ஏற்ற சொற்களில்லையென்றுதான் பிறர் கருதுவார்கள். எனவே, தமிழ்மொழி வளர்ச்சியில் இன்றியமையாத ஒரு கூறு பிறமொழிச் சொற்களைக் கலவாது தமிழ்ச் சொற்களைக் கையாளுவதாகும்.

புதிதாகத் தோன்றும் கருத்துக்களை விளக்கவும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பெறும் பொருள்களைக் குறிப்பிடவும் புதிய சொற்களை ஆய்ந்து அமைக்க வேண்டுவது ஒரு பணி. மற்றொன்று முன்னரே உட்புகுந்த பிறமொழிச் சொற்களை நீக்கித் தனித்

தமிழ்ச் சொற்களைக் கையாளுவது. கையிலே காசில்லாவிட்டால் கடன் வாங்கலாம். கடன் தருகிறார்களே என்பதற்காகத் தொடர்ந்து ஒருவன் கடன் வாங்கினால் அவன் எதிர்காலம் என்னாகும்?

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு

என்றநிலையெய்தும். ஆனால் நற்குடியில் பிறந்த ஒருவன் மிகக் கடுமையாக உழைத்தால் வாங்கிய கடனைத் திருப்பித் தந்து, துன்புறும் பிறருக்குத் தான் கடன் கொடுக்கும் அளவுக்கும் செல்வம் பெற்றவனாய்த் திகழ்வான். அதுபோல அறிவியல் துறையில் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்ற பொருள்களுக்கு வேறு வழியின்றித் தொடக்கத்தில் வேற்று மொழிச் சொற்களைக் கடன் வாங்கினாலும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஏற்ற தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிப்பதே தக்கது இன்றியமையாத பிறமொழிச் சொற்களைத் தேவைப் படும் அளவில் தேவைப்படும் காலத்திற்குப் பயன் படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்தத் தொல்காப்பியர் முதலானோர் வகுத்த விதிகளைப் பின்பற்றலாம். ஆனால், பிறமொழிச் சொற்கள்சிலவற்றை ஏற்க வேண்டிய போதும் அச்சொற்களின் பொருள்களை ஆய்ந்து தமிழ் மொழியில் கூடியவரையில் தன் வயப்படுத்திய சொற்களாகவே அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு மொழி வளருவதற்கு ஓர் இன்றியமையாத சூழ்நிலை அம்மொழி பொது மக்களுடன் நெருங்கிய அடிப்படையான தொடர்புடையதாயிருக்கவேண்டும். அவ்வாறின்றிச் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ள மக்கள் அளவில் மட்டும் வளர்க்கும் முயற்சியோடு நின்றால் உண்மையான நிலையான வளர்ச்சி பெறாது. துருக்கி மொழியின் முன்னேற்றம் இதற்கு எடுத்துக் காட்டாகும். துருக்கி நாட்டின் தலைவர் கமால் பாட்சா துருக்கி மொழியிலுள்ள அரபிச் சொற்களையெல்லாம் நீக்கித் துருக்கி மொழியைத் தூய்மைப்படுத்திப் பொது மக்களுடன் அம் மொழியைத் தொடர்புடைத்ததாகச் செய்து வளரச் செய்தார். எனவே, தமிழ் மொழி நிலைத்த வளம்பெற வேண்டுமானால் தமிழ் நாட்டிலுள்ள பொது மக்களிடம் தொடர்புள்ள அடிப்படையில் இருக்கவேண்டும்.

(34-ஆம் பக்கம் பார்க்க)

ஈயும் ஏயும்

டாக்டர் மோ. இசரயேல்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே
(தொ. சொ. 451 ; நன். 336)

இந்நூற்பா தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு இலக்கண நூற்களிலும் யாதொரு வேறுபாடும் இன்றிக் காணப் படுகின்றது. எனவே நன்னூலார் அப்படியே எடுத்தாளுகின்ற ஒரு சில தொல்காப்பியச் சூத்திரங்களில் இதுவும் ஒன்றாகும். ஆனால் இவ்விரு இலக்கண நூலாரும் இந்நூற்பாவை அமைக் கும் இடங்களில் வேறுபாடு உள்ளது.

தொல்காப்பியனார் எச்சவியலில், வினைச்சொல்லைப் பற்றி வினையியலில் கூறாது விட்ட-எஞ்சிய செய்திகளைச் சொல்லும் சில நூற்பாக்களைத் தரும்பொழுது, இதனையும் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியத்தில்.

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே
(தொ. செ. 450)

என முன்னிலையொருமைஏவல்வினை அமைப்பைக் குறிப்பிடுகின்ற நூற்பாவை அடுத்து இதனை வைத்துள்ளார் ஆசிரியர்; 'செய்யாய்' என்னும் வாய்பாட்டுச் சொல் 'செய்' என்னும் ஏவல் குறித்த சொல்லுமாகி வருதலுண்டு [1] என்னும் செய்தியைக் கூறி அடுத்தாற் போல் இந்நூற்பாவை வைக்கின்றார். ஆனால் தொல் காப்பியனார் ஏவல் என்று குறிப்பிடவோ, ஏவல் என்ற சொல்லை இந்நூற்பாவில் பயன்படுத்தவோ இல்லை என்பது இவண் கருதத்தக்கது.

நன்னூலின் ஆசிரியராகிய பவணந்தி முனிவர் இந்நூற் பாவை வினையியலில் முன்னிலையொருமை வினைமுற்று விகுதி களைக் கூறும் நூற்பாவிற்கும் முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகளைக் கூறும் நூற்பாவிற்கும் இடையில் அமைத்துள்ளார்.

முன்னிலை வினைச்சொல்லின் ஈற்றில் வரும் ஈகாரமும் ஏகார மும் அம்முன்னிலைச் சொற்கேற்ற மெய்யூர்ந்து வரும் என்ற

பொருளில் அமைந்த இந்த நூற்பாவிற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்கள்

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ (அகம் 46)
அட்டிலோலை தொட்டனை நின்மே (நற். 300)

போன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர்.

ஈகாரம், ஏகாரம் பெற்று வருகின்ற இவ்விருவகையான சொற்களையும் இலக்கண நூற்கள், "முன்னிலை முன்னர்" என்று குறிப்பிட்டு அவை முன்னிலைசொற்கள் என்பதைத்தெளிவுபடுத்து கின்றன; இவை முன்னிலை வினைச்சொற்கும் பொருந்தும் மெய்யை ஊர்ந்து வரும் என்றும் கூறுகின்றன. நூற்பாவினின்று அவை முற்றுவினையா ஏவல்வினையா என்பது தெளிவாகவில்லை. ஒருமையா பன்மையா என்பது கூடத்தெளிவில்லை.

தொல்காப்பியனார் தம் இலக்கண நூலில் ஏவல்வினை பற்றிய செய்திகளை எங்கும் வெளிப்படையாகக் கூறவில்லை. எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி விதிகளைக் கூறுங்கால் ஒரு சிறிது ஏவல் பற்றிய செய்திகளைக் குறிப்பாகத் தருகின்றார். அவர் முன்னிலை வினையையும் ஏவல் வினையையும் பிரித்து வேறுபடுத்தி இலக்கணம் கூறவில்லை எனலாம். அவர் ஏவல் வினையை முன்னிலைவினையுள் அடக்கி, இரண்டையும் ஒன்றாகவே கொள்ளுகிறார் என்பதற்குத் தொல்காப்பிய வினையியலுள் ஏவல் பற்றிய செய்தி யாதொன்றும் வெளிப்படையாகக் கூறப்படாமையும் சான்றாக அமைகின்றது. ஆனால் நன்னூலார் ஓரளவு ஏவல் வினையை முன்னிலை வினையினின்று பிரித்துக்காட்ட முயலுகின்றார். அவர் 'செய்யென் னேவல் வினைப்பகாப் பதமே" (நன் 138) என ஏவல் ஒருமைவினையினையும், "மின் அவற்றேவல்" (நன். 337) என வினையியலுள் முன்னிலைப் பன்மை விகுதிகளைக் கூறும் நூற்பாவில் 'மின்' என்ற ஏவற்பன்மை விகுதியையும் வேறுபடுத்திக் காட்டுவது ஏவல் வினையின் இலக்கணம் பற்றிப் பிற்காலத்தில் தெளிவு ஏற்பட்டமைக்குச் சான்றாக அமையும். தொல்காப்பியனார் ஏவல் வினையை வேறுபடுத்திக் காட்டாத நிலையில், போதிய அளவு தெளிவு ஏற்படாத "சென்றீ, நின்மே" போன்ற சொற்களுக்கு இலக்கணங் கூறும் நூற்பாவை எச்சவியலுள் வைத்தார். காலப் போக்கில் அவற்றைப் பற்றி ஓரளவு தெளிவு ஏற்படவே ஏவல் வினையை முன்னிலை வினைச் சொற்களினின்று வேறுபடுத்திக்காட்ட முயன்ற நன்னூலார், இதனை வினையியலுள் முன்னிலை, ஏவல் ஆகியவற்றிற்கான மிகப் பொருத்தமான இடத்தில் அமைத்துள்ளார்.

மேலும் தொல்காப்பியனார் "செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்" (தொ. சொ. 450) என்று கூறி, அடுத்த நூற்பாவில் "முன்னிலை முன்னர்" (தொ. சொ. 451) என்று குறிப்பிடுவது சிறிது ஆழ்ந்து நோக்கத்தக்கது. "செய்யாய்" என்னும் வாய்ப்பாட்டில் உள்ளவற்றை முன்னிலை வினைச்சொல் என்று கூறிய ஆசிரியர் சென்றீ, நின்மே போன்ற சொற்களை "முன்னிலை" என்று மட்டுமே கூறி உள்ளார். ஆகவே தொல்காப்பியனாருக்குச் 'செய்யாய்' என்ற வாய்பாட்டுச் சொற்களைப் போன்று பின்னவை வெறும் முற்றுவினைகளாகத் தெளிவுற அமையவில்லை என்ற எண்ணம் தோன்றி இருக்கலாம். ஓரளவு ஏவல் வினையைப் பற்றி பிரித்துணர்த்திய நன்னூலார் நூற்பாவின் செய்தியை ஏவல் பற்றியது என்று உணர்ந்தும் சென்றீ, நின்மே போன்ற சொற்களில் நல்ல தெளிவு ஏற்படாததால் தொல்காப்பியனார் அமைத்த நூற்பாவினை யாதொரு மாற்றமும் செய்யாமல் அப்படியே ஆளுகின்றார். நன்னூலார்க்கு அவை முன்னிலை ஏவல் வினைகள் என்றும், ஒருமையில் வழங்குவன என்றும் தெளிவு ஏற்பட்டிருக்கலாம்.

உரையாசிரியர் தரும் விளக்கங்கள் :

இளம்பூரணர்

"முன்னிலைக்கண் ஆன ஈகார ஏகார இடைச்சொற்கள் முன்னிலைக்குப் பொருந்திய மெய்யை ஊர்ந்து வரும்; இவை இரண்டும் தத்தம் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொற்கள்" என்கின்றார்.

சேனாவரையர்

"முன்னிலை வினைச்சொல் முன்வரும் ஈகாரமும் ஏகாரமும் அம்முன்னிலைச் சொற்கு ஏற்ற மெய்யை ஊர்ந்து வரும்" என்கின்றார்.

நச்சினார்க்கினியர்

"இவற்றுள் ஈகாரம் புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ எனக் கடதற வை ஊர்ந்து வரும் என்பது தோன்ற அந்நிலை மரபின் மெய் என்றார்" எனவும், "ஏகாரம் மகரம் ஊர்ந்து வரும்" எனவும் கூறுகின்றார்

தெய்வச்சிலையார்

"முன்னிலை வினைச்சொற்கள் ஈகாரமும் மகரம் ஊர்ந்த ஏகாரமும் முன்னிலை மரபினையுடைய மெய்யை ஊர்ந்து வரும் ... ...

முன்னிலை மரபின் மெய்யாவன உண், தின் என்னும் சொற்கள் ஈற்றெழுத்தோடு பால் காட்டும் எழுத்தினைப் புணர்க்க இடையே வரும் மெய்யெழுத்து என்கின்றார்; மேலும் "இ, ஐ, ஆய் அன்றி இவையும் சிறுபான்மை வருமெனக் கொள்க" என்கின்றார்.

நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் வாயிலாக ஈகாரம் க, ட, த, ற என்னும் மெய்களை ஊர்ந்துவரும் என்று தெளிவாகின்றது. தெய்வச்சிலையார் குறிப்பிடுவது ட, ற என்னும் மெய்களை ஊர்ந்தே ஈகாரம் வரும் என்பதை உய்த்து உணர வைக்கின்றது.

எ-டு, சென்றீ, காண்டீ, ஓத்தீ, புக்கீ.

ஏகாரம் மகா மெய் ஊர்ந்தே வரும் என உரையாசிரியர் அனைவரும் தெளிவுபடுத்தி உள்ளனர்.

எ-டு, நின்மே, சென்மே

இம்மெய்களைப் பிற்கால இலக்கண அறிஞர் எழுத்துப் பேறு என்பர்.

முன்னிலையில் ஈகாரம்

தொல்காப்பியனார் முன்னிலை ஒருமைக்கு இ, ஐ, ஆய் என்னும் விகுதிகளையும் முன்னிலைப் பன்மைக்கு இர், ஈர், மின் என்னும் விகுதிகளையும் தருகின்றார். நன்னூலாரும் இவ்விகுதிகளைத் தொகுத்து "மின் அவற்றேவல்" (நன். 337) என்று கூறிச் சிறிது வேறுபடுத்திக் காட்டுகின்றார். தன்மையில் என், ஏன்; எம், ஏம், முன்னிலைப் பன்மையில் இர், ஈர், படர்க்கையில் அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர் என்பவை விகுதிகளாக அமைகின்ற வகையினை ஆயுங்கால் ஒவ்வொரு இடத்திலும் குற்றுயிர், நெட்டுயிர் இரண்டுமே ஒரே பொருளில் வழங்குகின்றமை போதரும். முன்னிலைஒருமையில் மட்டும், இகர விகுதி அமையும் என்று கூறிய இலக்கண ஆசிரியர்கள், முன்னிலையில் வழங்கும் அதற்கு இணையான நெட்டுயிர் ஈகாரத்தை "முன்னிலை முன்னர்" (தொ. சொ. 451) என்று கூறியும் ஏன் விகுதியாகக் கொள்ளவில்லை? ஈகாரம் முன்னிலை வினைமுற்று விகுதியாக மிக அருகிய வழக்கு பெற்றுள்ளமையும் அதன் வழக்குகளை ஆயுங்கால் அது ஒரு சில இடங்களில் ஏவல் வினை முற்றில் விகுதியாக ஆட்சி பெற்றுள்ளமையுமே காரணம் எனலாம். எனவே தொல்காப்பியனார்முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளைக் கூறும் இடத்தினின்று வேறு படுத்தி, முன்னிலை வினைகளைப்பற்றி கூறுதுவிட்ட செய்திகளையும் கூறும் எச்சவியலில் ஈகாரத்தை விகுதியாகப் பிரித்துக்காட்டாமலே

அதனைக் குறிப்பிட்டுள்ளார் (தொ. சொ. 451). நன்னூலார்க்கு ஈகாரம் முன்னிலை ஒருமை விகுதி என்ற தெளிவு ஓரளவு ஏற்பட்டும் அதனை விகுதியாகக் கூறும் துணிச்சல் இல்லை,

தெய்வச்சிலையார் ஈகாரம், ஏகாரம் இரண்டும் இ, ஐ, ஆய் போன்று முன்னிலை ஒருமை விகுதிகளாகச் சிறுபான்மை வரும் எனக்கருதுகின்றார். தெய்வச்சிலையார் கருத்து ஈகாரத்திற்கு மட்டுமே பொருந்தும். ஈகாரம் பெரும்பாலும் முன்னிலை ஒருமை முற்றுவினை விகுதியாகவும் மிக அருகி ஏவல் வினை விகுதியாகவும் சங்க இலக்கியத்தில் வழங்குகின்றமையைக் காணலாம். இது இகரத்தின் நீட்சி பெற்ற வடிவமேயாகும் என்றி (நற். 280), படர்தி (குறு 128), ஒத்தி (புறம் 8), சேறி (திருக்குறள் 1249) என்பன இகர விகுதி பெற்ற முன்னிலை வினைச்சொற்கள். ஒத்தீ (புறம் 56), அறுதீ (புறம் 10) போன்ற முன்னிலை ஒருமை முற்றுவினைகளும்- சென்றீ (அகம். 46) போன்ற ஏவல் வினைமுற்றும் ஈகார விகுதி பெற்றவை. எனவே ஈகாரம் முன்னிலை விகுதியாகக் கொள்ளத்தக்கது என்பது தெளிவு.

முன்னிலையில் ஏகாரம்

ஈகாரம் முன்னிலையில் விகுதி எனக் கண்டோம். ஆனால் ஏகாரம் விகுதி அன்று. அது அசை நிலையேயாகும். இரண்டனையும் ஒழுங்கு வைத்து ஒரே நூற்பாவில் கூறுவதற்கு அவை முன்னிலையில் அமைதல் தவிர வேறு ஒற்றுமைகள் இல்லை எனலாம்.

நின்மே (நற். 300)
சென்மே (நற் 247 ; அகம் 376
களைமே (புறம். 145)

ஈண்டு மகரமெய் வருதல், ஏகார வுயிர் ஊர்ந்து வருதற் பொருட்டே என்பது இலக்கண நூலார் கொள்கை. இவண் வேறு யாதேனும் மெய்யெழுத்து ஏகாரவுயிர்க்குப் பற்றுக்கோடாக வருதல் இல்லை. மகரமெய் மட்டுமே வருகின்றது- இம் மகரம் ஆய்விற்குரியது. இம்மெய் பெற்று வருகின்ற வினைச் சொற்கள் அனைத்தும் ஏவலின்பாற் பாட்டவைகளே. ஏகார வுயிரை ஈற்றில் பெருமலே மகர மெய்யீற்றுடன் அமைகின்ற ஏவல் வினைச்சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

கொண்ம் (புறம். 152)
உண்ம் (புறம். 178)
தின்ம் (புறம். 150)
வாரும் (பரி. 14)

இச்சொற்கள் முன்னிலையில் ஏவலாக வழங்குகின்றன. கொள், உண், தின், வா என்னும் வினையடிகளுடன் -உம்/-ம் என்னும் ஏவற்பன்மை விகுதி இணைந்துள்ளது. ஏகாரவுயிர் பெற்று வரும் நின்மே, சென்மே போன்ற சொற்கள் அடிப் படையில் ஏவற்பன்மையாக அமைந்து, காலப்போக்கில் ஏவல் உயர்வு ஒருமையில் வழங்கலாயின.

ஏகாரம் முன்னிலை விகுதியன்று சொற்கள் ஏகாரம் பெரு மலே -உம்/-ம் ஈற்றுடன் நின்று ஏவலை உணர்த்தமுடியும். அங்ஙனமாயின், ஏகாரம் எற்றுக்கு? ஏகாரத்தைப் போன்று, வேறு சில அசைநிலைகளும் ஏவல் வினையுடன் அமைந்து வழங்குவதைச் சங்க இலக்கியத்தில் காணலாம்.

உள்ளுமோ (புறம். 48) உள்ளும்—ஓ
மொழிமோ (குறு. 2) மொழிம் — ஓ
உரைமோ (ஐங். 66) உரைம் — ஓ
கேண்மியா கேண்ம்-யா

சேர்மின் (புறம் 9) சேம் — இன் (<என்)

ஏ. யா, ஓ, இன் (<என்) என்பன அடிப்படையில் விளிக் குறியீடுகளே. அவை ஏவல் வினைகளுடன் இணைந்து அசைச் சொற்களாக நின்று, ஏவலை அன்புடன் தெரிவித்தற்குப் பயன் படுகின்றன; அதாவது வியங்கோளாக ஏவல்வினை செயல்படும் வகையில் இவை ஏவலை மாற்றம் அடையச் செய்கின்றன எனலாம்

எழுத்துப் பேறு?

முன்னிலையில் ஈயும் ஏயும் எந்தெந்த மெய்களை ஊர்ந்து வரும் என இலக்கண நூலார் கூறவில்லை உரையாசிரியர்களே மெய்களைச் சுட்டிச் கூறுகின்றனர். சங்க இலக்கியங்களை ஆயின், த், ட், ற் ஆகிய மெய்களையே ஈகாரம் ஊர்ந்து வருதலும் மகர மெய்யை ஏகாரம் ஊர்ந்து வருதலும் காணலாம். ட், ற் என் பவை தகரத்தின் திரிந்த வடிவங்களேயாகும். தகரம் நிகழ் வெதிர் (Non-past) கால இடைநிலையேயாகும். தகரம் நிகழ் கால / எதிர்கால இடைநிலையாக அமைதல் நெல்லை, குமரி

மாவட்ட வழக்குகளில் இன்றும் காணலாம். முன்னிலையில் த், ட், ற் போன்ற இந்த இடைநிலைகள் பெற்றவை தவிர வேறு எவ்வகையான நிகழ்காலச் சொற்களும் சங்க காலத்தில் அல்லது தொல்காப்பியனார் காலத்தில் முன்னிலையில் வழங்காமையும கருதத்தக்கது. எனவே ஈகாரம் ஊர்ந்து வரும் மெய்கள் எழுத்துப்பேறு அன்று; காலங் காட்டும் இடை நிலைகளே யாகும்.

ஏகாரம் ஊர்ந்து வரும் மகரம் ஏவல் குறியீடாகும் எனவே மகரமும் எழுத்துப் பேறு அன்று,

முடிவுரை. முன்னிலை வினைகளில் காணும் ஈகாரம் வேறு; ஏகாரம் வேறு. ஈகாரம் முன்னிலை இடவிகுதி; இகரத்தின் நீட்சி பெற்ற வடிவம். பெரும்பாலும் முன்னிலை யொருமை வினைமுற்று விகுதியாகவும் சிறுபான்மை ஏவல் ஒருமை விகுதியாகவும் அமைவது. ஏகாரம் அடிப்படையில் வினாக் குறியாக அமைந்துள்ளது ஏவல் வினைகளோடு அசைநிலையாக நின்று, அவற்றை வியங்கோளின் இயல்பு பெறும் வகையில் உணர்த்த உதவுவது, தொல்காப்பியனார் ஏவல் வினையைப் பிரித்துக் காணாதது மட்டுமன்றி, அதனை முற்று வினையினின்று வேறுபடுத்தாமையாலும் நன்னூலாரும். சொல் வடிவத்தைப் பிரித்து, வழக்கினைப் பகுத்து காணாமையாலும் இலக்கண நூற்களில் ஈகார, ஏகார ஈறு பெற்ற ஏவல் வினைகள் விளக்கம் பெறத் தெளிவுபடுத்தப் படவில்லை. எனவேதான் சென்றீ, நின்மே போன்ற வடிவங்கள் ஏவலா அன்று எனவும் ஒருமையா பன்மையா எனவும் ஐயுற நிற்கின்றன.

அடிக்குறிப்புக்கள்

1. தெய்வச்சிலையார், தொல்காப்பியம் சொல்லதிகார உரை சூத்திரம் 440
2. தொல்காப்பியம், எழுத்து.
   தொ. எ. 210 "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்"
   தொ. எ. 224. "ஏவல் குறித்த உரையசை மியாவும்"
3. தொல்காப்பியம் சொல்லதிகாரம் 223, 224
4. தெய்வச்சிலையார், தொல்காப்பியம் சொல்லதிகாரம் சூத்திரம். 441.

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.,
டிப். மானிடயியல்.
தொல்பொருளாய்வுத்துறை சென்னைப் பல்கலைக் கழகம்.

(முற்றெடர்ச்சி, துணர் 44 பக்கம் 350)

தற்காலத் தமிழகம்.

உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்த தற்கால மனிதனின் அன்றுட வாழ்க்கை பற்றிய சுவையான செய்திகள் நமக்கு ஏராளமாகக் கிடைத்தவண்ணமுள்ளன. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, பிரான்சு, சுபெயின், இந்தோசைஞ, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தற்கால மனிதனுக்குச் சொந்தமான குகைகளும், கற்கருவிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் தற்கால மனிதனின் மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள் போன்றவைகளும் அகப்பட்டுள்ளன. இவற்றை ஆய்ந்து பல அரிய உண்மைகளைக் கண்டு பிடித்துள்ளார்கள். ஆதிமனிதன் எப்பொழுது இப்புவியில் தோன்றினுன்; அவன் எத்தகைய முறையில் வளர்ச்சியடைந்து தற்போதைய ஓர் உயர்ந்த நிலையை எய்தினுன் என்பன போன்ற சிந்தையைக் கொள்ளை கொள்ளும் நுணுக்கமான தத்துவங்களுக்கு விளக்கம் ஓரளவுக்குக் கிடைத்துள்ளது.

கற்காலக் கருவிகளை ஆய்ந்தறியும் போது அக்காலத்தில் பலவேறு நாடுகளுக்கிடையே மக்கள் கூட்டங்களின் இடப்பெயர்ச்சி, கருத்துப்பறிமாறுதல் போன்றவை நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிய வருகின்றது. எடுத்துக் காட்டாக சென்னைக்கு அருகில் ஏறக்குறைய 30 கல் தொலைவிலுள்ள அத்திரம்பாக்கம் என்னும் ஊரில் கண்டெடுக்கப் பட்டுள்ள பழங்கற்காலக் கருவிகளும் தென் ஆப்பிரிக்கர்களின் கற்காலக் கருவிகளும் தம்முள் பல ஒற்றுமைகளைப் பறைசாற்றுகின்றன ! அவற்றின் தோற்றம், செய்முறை, பயன் போன்றவற்றை ஆராயும் போது பழங்கற்காலத் தமிழகமும் ஆப்பிரிக்காவும் நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை உணரமுடிகின்றது.

உலகின் பல நாடுகளில் கற்காலம் ஒரு சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கற்காலத்தைக் கீழ்க்கண்டவாறு பிரித்து ஆய்கிருர்கள். அவை வருமாறு :—

1. பழங்கற்காலம், (மிகப் பழங்கற்காலம், இடைப் பழங்கற் காலம், பிற்பட்ட பழங்கற்காலம் போன்ற மூன்று உட்பிரிவுகள் இதில் அடங்கும்)

2. இடைக்கற்காலம், (3) புதிய கற்காலம் இக்கற்காலப் பிரிவுகள் இந்தியாவின் எல்லாப்பகுதிகளுக்கும் பொதுவாகப் பொருந்தும் எனக் கொள்ளலாம். தமிழகத்தில் இதுவரை நடத்தப்பட்டுள்ள அகழ்வராய்ச்சிகள் மூலம் கிடைத்துள்ள கற்காலத் தடையங்கள் இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன. இப் பிரிவுகள் ஒவ்வொன்றைப் பற்றியும், நாம் சிறிது விரிவாக ஆராய்வோம்.

1. பழங்கற்காலம்:- மிகப் பழங்கற்காலம்:— இக்காலத்திற்குட் பட்ட கருவிகள் தமிழகத்தின் பல மாவட்டங்களில் கண்டெடுக் கப்பட்டுள்ளன. குறிப்பாக செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில் தான் கற்கருவிகள் மிகுதி யாகக்கிடைத்துள்ளன. இன்னும் குறிப்பாகக் கூறுவோமேயானால் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அத்திரம்பாக்கம், வடமதுரை, எருமைவெட்டிப்பாளையம், மஞ்சரகரணை போன்ற ஊர்களில் கிடைத்துள்ள கருவிகள் உலகப்புகழ் பெற்றவையாகும். அத்திரம்பாக்கத்தில மட்டுமே ஆயிரக்கணக்கான கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன இவ்விடம் "கற்கால மனிதனின் கருவி உற்பத்தித் தளமாக" விளங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. நிலப்பரப்பின் மேல் எல்லாப் பகுதிகளிலும் இக்கருவிகள் சிதறிக்கிடக்கின்ற ஒரு அரிய காட்சியை இன்றும் இங்குக் காணலாம். இவ்விடத்தைப் பற்றிய இன்னுமோர் அரிய குறிப்பு உண்டு: இங்கு கற்கால மனிதனுக்குச் சொந்தமான மலைக் குகைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதாகும் குடியம் என்ற இடத்தில் உள்ள குகையின் தளப்பரப்பில் அகழ் வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன.[2] அவற்றின் மூலம் நமக்குத் தெரியவருகின்ற கருத்துக்கள் கீழே வருமாறு:

பழங்கற்காலக் கருவிகள் மிகச் சொர சொரப்பாகவும் தரம் குன்றிய வேலைப்பாடு கொண்டனவாயும் உள்ளன. இக்கருவி களில் பெரும்பான்மை கைக்கோடரிகளாகும். இக்கருவி மண் ணுள் விளையும் கிழங்குகள், வேர்கள் போன்றவற்றை அகழ்ந்து எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகும். இவற்றின் பக்கங்

1. V. D Krishnaswami, **Prehistoric Man round Madras**, Indian Academy of Sciences, Mad as, 1938, No. 3, PP. 32-35.
2. Indian Archaeology 1962-63, A Review, P-12

கள் கூர்மையாக இல்லாமல், முனைகள் மழுங்கிக் காணப்படுகின்றன. அவையாவன :- வட்டவடிவமானவை, சதுரமானவை, நீளமானவை, செவ்வகமானவை, கோழிமுட்டை வடிவமானவை போன்றவையாகும். இவற்றில ஒருவகைக்கு "ரோசுட்ரோ காரினட்" (Rostro carinet) என்று பெயர். அதாவது இதன் மேற்பரப்பு ஆமை உருவத்தை ஒத்திருக்கும். இவை சுமார் 8" நீளமுடையவையாகும்.

இடைப்பழங்கற்காலம் :— இப்பிரிவுக்குட்பட்ட கருவிகள் காலத்தால் சற்றுப் பிற்பட்டனவாகும். எனவே கூடுதல் வேலைப்பாடுடன் காணப்படுகின்றன. கைக்கோடரிகளைத் தவிர வேறுபல கருவிகளும் இக்காலத்தில் செய்யப்பட்டன. இவற்றில் பெரும்பாலன உருவத்தில் சிறியனவாகும். அதாவது ஒரு தாய்க்கல்லிருந்து (Core) செதில்கள் (flakes) பிளக்கப்பட்டு, பிறகு அவை வேலைப்பாடு அமைந்த கருவிகளாக மாற்றப்படுகின்றன. இச்செதிற்கருவிகளிலும் பலவகை உள்ளன. இவற்றுள் துளையிடும் கருவி, தோல், இலை போன்றவற்றைப் பதனிடும் கருவி, அறுக்கும் கருவி, வட்டவடிவமான சில்லுகள் போன்றவையாம். இயற்கையை எதிர்த்து மனிதன் போராட இவை பேருதவி செய்தன எனக்கூறுவது பொருத்தமாகும். சில செதில்கள் கைக்கோடரிகளாகவும் செப்பம் செய்யப்பட்டன. இவற்றின் இரு ஓரங்களும் ஒழுங்காகவும், கூர்மையாகவும் செதுக்கப்பட்டு காண்பவர் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் ஆக்கப்பட்டிருந்தன.

இடைப்பழங்காலத்திற்குச் சற்றுப் பிற்பட்ட பழங்கற்காலம் :— இந்த உட்பிரிவுக்குத் தற்சமயம் கொடுக்கப்பட்டுள்ள பெயர் "சீரிசுடு" (Series II) என்பதாகும். இது ஐரோப்பா கண்டத்தின் பழங்கற்கால உட்பிரிவுகளில் முக்கியமான ஒன்றாகும். இதையொட்டியே நம் நாட்டிலும் இந்த உட்பிரிவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கற்கால பிரிவுகளில் இதன் முக்கியத்துவம் இன்னும் சரியாக உணரப்படவில்லை. அத்திரம்பாக்கத்தில் இக்கருவிகள் குறைந்த எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. இது ஆராய்ச்சிக்குரியதாகும். இவற்றைச் செதிற் கருவிகள் என்று அழைப்பது மிகப் பொருந்தும் ஏனெனில் கருவிகளெல்லாம் சிறுசிறு செதில்களினால் செய்யப்பட்டவையாகும். இவை இலை வடிவம் தாங்கிய கூர்மையான கத்தியைப் போன்று பளபளப்பாகக் காட்சியளிக்கின்றன.

வேட்டையாடுவது, மீன் பிடிப்பது போன்ற தொழில்களுக்கும், விலங்குகளின் தோல், இலை போன்றவற்றைப் பதனிடுவதற்கும் இக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன என்று கூறலாம். தமிழகத்தில் இப்பழங்கற்கால மக்கள் சுமார் நான்கு இலட்சம்

ஆண்டுகட்கு முன்னமேயே வாழ்ந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

2. **இடைக்கற்காலம்**:— இப்பிரிவு பழங் கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடையில் வருவதாகும். கருவிகள் உருவத்தில் மிகச் சிறியவையாக உள்ளன. எனவே இவற்றை "மைக்ரோலித்சு" (Microliths) என்று அழைக்கிருர்கள். இவை மிகமிக உயர்தரமான கற்களினுல் செய்யப்பட்டவையாகும். பளபளப்பும், வழவழப்பும் உடையதாய்ப் பட்டொளி வீசி இவை மிளிர்கின்றன. குவார்ட்ஸ், அகேட், சாஸ்பர், கார்னிலியன், கார்னெட், சோப்புக்கல் போன்றவை இக்கற்களில் முக்கியமானவையாகும். இக்கற்கள் கண்ணைக்கவரும் பல வண்ணங்களில் கிடைப்பதால் கருவிகளும் அவ்வண்ணங்களைத் தாங்கிக் கண்ணாடித் துண்டுகளென மிளிர்கின்றன. கூரிய முனைகள், ஒரு முனை, இருமுனை செதில்கள் செவ்வகச் செதில்கள், பட்டடைகள், சிறு அம்புகள், கொக்கிகள் போன்ற கருவிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் தேரி (Teri) என்ற ஊரில் இக்கருவிகள் ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[3] இம்மாவட்டத்தில் பல மணல் மேடுகள் (Sand dunes) காணப்படுகின்றன. இம்மேடுகளில் இக்கருவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு.

இவற்றின் கால வரம்பை வரையறுக்கக் கூடிய அளவுக்கு இன்னும் தடையங்கள் செம்மையாகக் கிடைக்கவில்லை, எனினும் தேரியில் கண்டெடுக்கப்பட்டவைகளின் காலவரம்பு ஏறக்குறைய கி. மு. 4500 என்று மதிப்பிடலாம். திருநெல்வேலி மாவட்டத்தில் விரிவான அகழ்வராய்ச்சிகள் நடத்தப்பட்டால் இன்னும் பல தெளிவான, சுவையான குறிப்புகள் கிடைக்கப்பெறுவோம்.

3. **புதிய கற்காலம்**:— புதிய கற்காலத்தின் தோற்றம் மனித குலப்பண்பாட்டின் தொடக்கம் எனக் கூறலாம். இக்காலத் தொடக்கத்தில் தான் மனிதன் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து நடக்கத் தொடங்கினுன். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத சில வசதிகளை நிரந்தரமாகப் பெறவேண்டும் என உணரத் தொடங்கினுன் பிறகு அவ்வசதிகளை அடைவதற்குரிய கருவிகளையும், வழி வகைகளையும் முறையாக கற்றுத் தேர்ச்சியடைந்தான். வேளாண்மை, விலங்குகளை வளர்த்தல், பழக்குதல், பாதுகாத்தல், பானை செய்தல், களிமண், சுட்ட களிமண்ணினுல் வீடுகட்டுதல், பளபளப்பான, நேர்த்தியான கற்கருவிகளைச் செய்தல் போன்ற அரும்பெருஞ்சாதனைகளை மனிதன் முதன் முதலில் செய்து முடித்தான். இக் கண்டுபிடிப்பு

3. Zenner, F. E. and Allchin-Ancient India No. 12, 1956, PP. 4-20

கள் மனித வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளாகும். இத்தகைய கண்டுபிடிப்புகள் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு உறுதுணையாகவிருந்தன எனக் கூறுதல் மிகையாகாது. பழங்கற்காலத்தில் மனிதன் நாடோடியாக விலங்கினைப் போல அலைந்து திரிந்து கொண்டிருந்தான். தனக்கு வேண்டும் உணவிற்கு, அவ்வப்போது, காடுகளில் இயற்கையாகக் கிடைக்கின்ற காய், கனி, வேர், போன்றவற்றையே நம்பி இருந்தான், கண்ணில்பட்ட விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடிப் பசியாறி வந்தான். அவன் உணவுப் பொருள்களை சேகரிப்பவனாக இருந்தானேயன்றி (Food Gatherer) அவற்றை எவ்வாறு உற்பத்தி செய்வது, பாதுகாப்பது என்பன போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் புதிய கற்காலத்தில் பயிர்களைப் பயிரிடும் வித்தையைக் கண்டுபிடித்தான் அக்காலத்தில் பயிரிடும் முறையின் தத்துவம் யாதெனில் ஒரு இடத்தில் ஒரு முறை பயிரிட்டு அறுவடை செய்த பின்னர், அவ்விடத்திலேயே மறுபடியும் பயிரிடாமல், வேறு ஒரு புதிய இடத்தை நாடிச் செல்லுவதே யாகும். அதுபோலவே கண்ணில் படுகின்ற விலங்குகளைத்தான் வேட்டையாடல் வேண்டும் என்ற முறையை மாற்றி அவற்றைப் பழக்குதல், வளர்த்தல் ஆகிய கலைகளிலும் கைதேர்ந்தவனாக விளங்கினான். இதன் வாயிலாகத் தனக்கு வேண்டிய இறைச்சி உணவை எப்போது வேண்டுமாயினும் தடையின்றிப் பெற அவன் வகை செய்துகொண்டான். அக்காலத்தில் மனிதன் ஆற்றோரங்களிலும், ஏரி, குளம் ஆகியவற்றின் கரைகளிலும்தான் பெரும்பாலும் வாழ்ந்துவந்தான். பானை போன்ற பாத்திர வசதிகள் இல்லாமையால் தனக்கு வேண்டும்பொழுது தண்ணீரைப் பெறுவதற்காகவே அவன் அவ்வாறு வாழ நேர்ந்தது ஆனால் மட்பாண்ட தொழில் கண்டுபிடிப்பு, நீரை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக எடுத்துச்செல்லவும், வேண்டும் போது குடிப்பதற்கும் வகை செய்தது. ஆதி மனிதனின் குடியிருப்பு இடங்களெல்லாம் பழம் பெரு ஆற்றங்கரையோரங்களில் தான் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் காவேரி, பாலாறு, வேகவதி, தாம்பிரபரணி போன்ற ஆற்றங்கரைகளில் தான் பழந்தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும் அடுத்து ஒளியுடையதும், வழவழப்புமான கற்கருவிகள் படைக்கப்பட்டன. மனித சமுதாயத்தில் தொழிற்கல்வியின் தொடக்கத்தை இப்படைப்புகள் நமக்கு உணர்த்துகின்றன புதிய கற்காலக் கருவிகள் மிக நேர்த்தியான வேலைப்பாடு கொண்டனவாக உள்ளன. கல்லிலோ அல்லது மணற் பரப்பிலோ கற்கருவிகளை நன்றாக உரசினால் வழவழப்புத் தன்மை ஏற்படும் என்பதைப்

புதிய கற்கால மனிதன் கண்டுபிடித்ததே இதற்குக் காரணமாகும். கருவிகள் பார்ப்பதற்கு உலோகத்தினுல் செய்தவை போல அவ்வளவு நேர்த்தியாக காணப்படுகின்றன. பிற்காலத்தில் உலோகங்களினுல் செய்யப்பட்ட கருவிகளுக்கும், புதிய கற்கால கருவிகளுக்கும் வடிவத்திலோ அல்லது வேலைப்பாட்டிலோ மிகுதியான வேற்றுமை இல்லை எனக் கூறலாம்.

சுருங்கச் சொல்லின் உலோக காலக் கருவிகளில் பல புதிய கற்காலப் படைப்புகளின் வளர்ச்சியையே உணர்த்துவனவாக உள்ளன. சாதாரண உளிகள், நீண்ட பிடியுடைய வெட்டுளிகள், கோடரிகள் போன்ற கருவிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. முதன் முதலில் பிரம்மகிரியிலும் (மைசூர்)[4] பின்பு மற்றவிடங்களிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் நமக்குத் தெரிவிப்பது யாதெனில் தென்னகத்தில் தூய்மையான புதிய கற்காலம் (Pure Neolithic age) என்ற ஒன்று கிடையாது. அது காலத்தால் பிற்பட்டு உலோக காலத்துடன் கலந்து திரிந்த ஒரு பிரிவு என்பதேயாகும். பிரம்மகிரியில் புதிய கற்கால கருவிகளும், ஏனைய தொல்பொருள்களும், உலோக காலத்துத் தொல் பொருள்களுடன் கலந்து காணப்பட்டதே இக்கூற்றுக்கு ஏது வாகும். எனவே தென்னகத்தின் புதிய கற்காலப் பிரிவுக்குச் செம்புகலந்த புதிய கற்காலம் (Neolithic-chalcolithic age) எனப் பெயரிடப்பட்டது. அண்மையில் பையம்பள்ளியில் (வட ஆர்க்காடு மாவட்டம்), செம்பு கலப்படமில்லாத புதிய கற்காலத் தடையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழகத்தில் தூய்மையான புதிய கற்காலப் பண்பாடு இருந்திருக்க வேண்டும் என்பது இப்போது உறுதியாகி விட்டது. இவர்தம் இடிந்த வீடுகள், அவற்றின் அமைப்பு விதிகள், பாத்திர வகைகள், அணிகலன்கள், கலைப்பொருள்கள் இறந்தவரைப்புதைக்கும் முறைகள் ஆகியவற்றைப் பற்றிய பல குறிப்புகளை அகழ்வாராய்ச்சிகள் நமக்கு நல்கியுள்ளன. வீடுகள் களி மண் சுவர்களையும், இலை, தழை, கோரை போன்றவற்றால் வேய்ந்த கூரைகளையும் கொண்டனவாக இருந்தன. சுவர்களின் அடித்தளம் திண்ணிய களிமண்ணைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. சதுரம், வட்டம், செவ்வகம் போன்ற அமைப்புகளைக் கொண்ட வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிய முடிகின்றது. அகழ்வாராய்ச்சிகள் அள்ளித்தெளிக்கும் இவை பற்றிய ஆழ்ந்த கருத்துக்களைப் பின்னர் விரிவாகவும். விளக்கமாகவும் காண்போம்.

(வளரும்)

---

4. Ancient India No. 4

"அந்தணர்" என்னும் சொல்லின் பொருள்

(செஞ்சொற் கொண்டல்
திரு. புலவர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., டிப். லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்)

கலித்தொகையில் :

கலித்தொகையின் கடவுள் வாழ்த்து "ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து" எனத் தொடங்குகின்றது. இப்பாட்டிற் கமைந்த நச்சினார்க்கினியர் உரையில், "ஆறு" என்பதற்கு "ஆறு அங்கத்தையும்" என்று பொருள் காணப்படுகின்றது "அவ் வேதந்தனைக் கொண்டே ஆறங்கங்களையும் அறியவல்லார் என்பது தோன்ற 'ஆறறி அந்தணர்' என்றார்; அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார் என்றவாறு" என்று மேலும் எழுதி விளக்கியுள்ளார் நச்சினார்க்கினியர். இவ்விடத்து 'அந்தத்தை அணவுவார் அந்தணர்' என்று எழுதுவது நம் சிந்தனையைத் தூண்டுகிறது. வேதங்களின் அந்தம் (ஈறு) என்று கூறி, அதனை அணவுதலாவது மேற்கொண்டு பார்த்தல் என்று கருதுகின்றார் இவ்வுரையாசிரியர். அந்தணர் என்ற சொல்லை இவ்வாறு கொண்டு பிரித்தல் எவ்வாறு பொருந்தும் என்று சிந்தித்தல் தவறாகாது.

வள்ளுவர் நெறியில் :

திருவள்ளுவர் "அந்தணர் என்போர் அறவோர்" என்று விளக்கம் தருகின்றார். அறவொழுக்கம் மேற்கொண்ட நீத்தாரையே அந்தணர் என்று திருவள்ளுவர் குறித்தார் என்று கொள்ளக் கிடக்கின்றது இத்தொடர்.

'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கும் உரித்தே' என்ற நூற்பாவில், வகையென்றதனாற் கொண்ட அறுமுறை வாழ்த்து, முனிவரையும், பார்ப்பானரையும், ஆனிரையையும், மழையையும், முடியுடை வேந்தரையும், உலகையும் வாழ்த்துதல் ஆகும். அங்கும் அநதணர் வேறாகவும் பார்ப்பார் வேறாகவும் கூறப்பட்டுள்ளமை காணலாம்.

திருக்குறளும் திருமந்திரமும் :

அந்தணர் என்றசொல்லைத் தமிழ்ச் சொல்லாகவே கொண்டு அழகும் தட்பமும் உடையவர் எனப் பொருள் கூறலே தமிழ்ச் சான்றோர் கண்ட தகுநெறி.

"அந்தணர் என்பது அழகிய தட்பத்தினை உடையார் என ஏதுப் பெயராகலின், அஃது அவ் அருளுடையார் மேல் அன்றிச் செல்லாது என்பது கருத்து என்று பரிமேலழகர் முற்கூறப்பட்ட குறள் உரையில் எழுதுகின்றார். "எல்லா உயிர்க்கும் செவ்விய தட்பம் செய்தலை மேற்கொண்டு ஒழுகலானே அந்தணர்" என்றெழுதும் மணக்குடவர் உரையும் இச்சொல்லைத் தமிழாகவே கருதுகின்றது என்பது வெளிப்படை. 'அம்' என்பதனை 'அழகு' எனப் பரிமேலழகரும், 'செம்மை' என மணக்குடவரும் கொண்டுள்ள அவ்வளவே வேறுபாடு ஈங்குக் காணப்பெறுவது. அந்தணர் பற்றி இவ்வுரைகாரர்கள் கூற்றுக்களோடு. திருமந்திரம் கூறும் மொழியையும் இணைத்துக் காணலாம்.

''அந்தண்மை பூண்ட[1] அருமறை யந்தத்துச்
சிந்தை செய்[2] அந்தணர்'' (234)

இவ்விடத்துத் திருமூலர் இச்சொல்லை இரு வேறு முறைகளினும் சிந்தித்துள்ளார் என்று கொள்ளலாம். 'அந்தண்மை பூண்ட' என்ற சொற்களும், 'மறை அந்தத்துச் சிந்தை செய்' என்ற சொற்களும் ஆழ்தற்குரியன. நச்சினார்க்கினியர் திருமூலர் வாக்கைப் படித்துணர்ந்தே இக்கலிப்பாச் சொற்கு உரை விரித்தனராதல் வேண்டும். இவருடைய பேரறிவிற்குத் திருமந்திரத்தின் இரண்டாவது விளக்கம் நன்கு வலியுடைத்தாகப் பொருந்தியிருந்ததாதல் வேண்டும். ஏனெனில், இரு பொருளையும் கூறி முன்னதனினும் பின்னதே சிறந்தது என்று காரணம் காட்டி எழுதியிருப்பாராயின் நன்றே. ஆனல் அந்தத்தை அணவுவோரே அந்தணர் என்பதே உறுதியாம்படி எழுதியுள்ளார் நச்சினார்க்கினியர், அல்லது 'அருமறை அந்தத்துச் சிந்தைசெய் அந்தணர்' என்ற சொற்களால் நச்சினார்க்கினியரே இப்புதுப்பொருளை இச்சொற்குக் கற்பித்து மகிழ்ந்தனர் என்றும் கொள்ளலாம். 'அந்தத்து அணவுதல் செய்' என்ற சொற்களைத் திருமந்திரம் தெளிவாகக் காட்டாததனல். இதனைப் படித்துணர்ந்திருந்த இவ்வுரையாசிரியர்க்குக் கலித்தொகை உரை எழுதுங்கால் இவ்வாறு எழுத இயன்றது என்றும் கூறலாம். எப்படியேனும், தமிழ்ச்சொல்லாகக் கொண்டு பொருள் காணும் அமைதி இருப்ப இவ்வாறு வடசொற் பாதியும் தமிழ்ச் சொற் பாதியும் ஆக இதனைக்கொண்டு பொருள் விரித்தல் பொருந்துமா ?

நடுவுநிலையினர் நிலை :

வடசொல்லின் ஒரு பகுதியும், தமிழ்ச் சொல்லின் ஒரு பகுதியும் கூடி இவ்வாறு ஒரு புதுச்சொல்லாய் நின்றது என்று கூறுத

லால் ஏதேனும் ஒரு பயன் விளைந்தது என்று கொண்டிடவும் இடம் இல்லை; வடசொன் மூலத்தை உடையதாக ஒரு தமிழ்ச் சொல் இருந்தால் தான் சிறப்பு என்று கொள்வோர்க்காயின் இது மகிழ்ச்சி விளைக்கக் கூடுமே தவிர, உண்மை காணும் நடுவு நிலை யினர்க்கு இஃது அத்துணை மகிழ்ச்சி வழங்காது. இந்தச் சொல்லை இவ்வாறு பிரித்துப் பொருள் கூறுதல் கூடுமாயின், இதே அமைப்பில் (Pattern) வேறு சொற்கள் நம்மொழியில் ஏதேனும் உண்டா?

'அணவு'தலை உடையவரை 'அணவுநர்' என உரைத்தல் தமிழில் கூடுமே தவிர, 'அணர்' என்று அழைத்தல் இல்லை இது போன்றே, 'வினவு' தலை உடையவரை, 'கனவு' தலை (கனவு காணுதல்) உடையவரை, 'உதவு' தலை உடையவரை, 'விரவு' தலை உடையவரை, 'உலவு' தலை உடையவரை, வினர், கனர், உதர், விரர், உலர் என்றெல்லாம் கூறிடும் அமைப்பு இத்தமிழிற் பண்டுதொட்டு இருந்து வந்ததில்லை இவற்றுக்கு மாருக இவற் றை முற்கூறியபடி 'விரவுநர்' என்ருே, 'விரவுவோர்' என்ருே கூறுதல் உண்டு.

1. வினவு + அர் > வினவு + ந் + அர்
   > வினவுநர்
2. கனவு + அர் > கனவு + ந் + அர்
   > கனவுநர்
3. உதவு + அர் > உதவு + ந் + அர்
   > உதவுநர்
4. உலவு + அர் > உலவு + ந் + அர்
   > உலவுநர்

என்று இவ்வாறு இத்தகு வினைப்பகுதிகள் மாறுகின்ற வழக் கினைத் தமிழிற் காண்கின்ருேமேயன்றி, 'அணர்' அமைப்பில் காண்கின்றிலோம்

தமிழ்ச் சொல்லாக்கம் தவறு:

அன்றியும் அந்தம் + அணர் என்பன இணைவதாகவே வைத்துக்கொண்டாலும், 'அந்தம்' என்ற சொல் (வட சொல்) தன்னுடைய வடிவத்தில் 'அம்' கெட்டு நின்று புணர்ந்தது என் பதற்கேனும் வேறு எடுத்துக்காட்டுகள் காட்டவியலுமா?

அந்தம் < அந்த்
அந்த் + அணர் > அந்தணர்

என்று ஆகின்றது போல வேறு எங்கேனும் தமிழில் இத்தகு ஆக்கம் காணப் பெறுகின்றதா எனில் இல்லையென்றே கூற வேண்டியிருக்கின்றது.

குறளாசிரியர் கருத்து :

அந்தணர் என்ற சொல்லிற்கான பொருள் நோக்கத்தையே 'மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்று திருவள்ளுவர் தெளிவாக்கக் காண்கின்றேம். அருள் உடையார் - அழகும் தட்பமும் உடையார் - என்பது தோன்ற 'எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூணடு ஒழுகுதல்' என்ற தொடரை அங்குத் திருவள்ளுவர் அமைத்தாராதல் அறிந்தின்புறத்தக்கது ''அந்தத்தை அணவுவோர் ஆகிய அந்தணர்' என்று இங்குப்பொருள் கண்டால் 'எவ்வுயிர்கதும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்' என்ற காரணம் விளக்கும் சொற்றொடர் இருந்தும் பயனில்லாமற் போகும்; இதனை 'நின்றுவறறல்' என்ற குற்றத்தின் பாற்படுத்துவர். அக்குற்றத்தைக் குறளாசிரியர்க்கு ஏற்றுதலும் கூடுமோ?

'அந்தணன்' இறைவனைச் சுட்டல் :

அன்றியும். ''அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற், பிறவாழி நீந்தலரிது'' என்ற குறட்பாவில், 'அந்தணன்' என்ற அருஞ்சொல்லால் திருவள்ளுவர் குறிப்பது இறைவனை. இவ்விடத்து 'அந்தத்தை அணவுதலை உடையவன்' என்னும் சொல் இறைவனுக்குப் பொருந்தாது போதலை நன்கு அறியலாம். சமயச் சான்றேரும் 'அந்தணன்' என்ற சொல்லால் இறைவனைச் சுட்டியுள்ளமை இங்கு அறியத்தக்கது.

கி, பி 7-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் அப்பரடிகள் தேவாரத்தே இச்சொல் வருகின்றது. அந்தணர்' என்ற சொல் 11 இடங்களிலும், 'அந்தணர்கள்' என்ற சொல் 3 இடங்களிலும் கையாளப்பட்டிருக்கின்றன. 'அந்தணன்' என்ற சொல்லால் இறைவனை அப்பரடிகள் குறிக்கும் இடங்கள் 5 ஆகும்; அந்தணன் என்ற சொல்லால் அந்தணர் வழிவந்த குறிப்பிட்ட மார்க்கண்டன். விசார சருமரைக் குறித்துள்ள இடங்கள் 2 ஆகும் இனி 'அந்தணாளர்' என்ற சொல்லாட்சியும் நம்மால் நினைவு கூறத்தக்கது உறுதியாக இச்சொல்லுக்கு அந்தத்தை அணவுதற் பொருள் விரித்துரைத்திடல் இயலாது. 'அழகையும் தண்மை யையும் ஆள்பவர்' என்ற பொருளையே குறித்திடல் பொருந்தும். அந்தணாளர் என்ற சொல்லால் அப்பரடிகள் இறைவனைக் குறிக்கும் இடம் ஒன்றே; ஏனைய இரண்டிடங்கள் அந்தணர்களையே குறிப்பன. இவ்வாறு ஏனையவற்றைப் போன்றே அப்பரடிகள் பாடும் இடங்கள் அனைத்தும் கூர்ந்து நோக்குங்கால், கலித்தொகை உரையில் நச்சினார்க்கினியருடைய பொருட் சார்பிற்குச் சிறிதும் ஏற்றன அல்ல என்பது தெளிவு.

நாட்டுப் பாடல்

பேராசிரியர். வ. பெருமாள்.
எம். ஏ,, பி. டி. எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

தோற்றுவாய் :

உலகத்தில் பல கலைகள் உண்டு. அவற்றை நுண்கலை அல்லது அழகுக்கலை என்றும் பொதுக்கலை என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம், முருகியல் போன்றவை நுண்கலையின் பாற்படும் இலக்கியம், பொருளாதாரம், வரலாறு, மெய்ப்பொருளியல், சமுதாயவியல் போன்றவை பொதுக்கலையின் பாற்படும். இலக்கியத்தைப் பொதுக்கலையின்பாற் சேர்த்தாலும் நுண்கலைக் குறிய தகுதியும் சிறப்பும் உண்டு.

இலக்கியத்தின் பொருள் :

இலக்கியம் என்றால் என்ன ? இலக்கு உடையது இலக்கியம். இலக்கு என்பது குறிக்கோள். உயர்ந்த குறிக்கோளை தன்னகத்தே கொண்டு விளங்குவதே இலக்கியம் எனப்படும். மண்ணாசையை நீக்குதல் வேண்டும் என்னும் குறிக்கோளையும் மண்ணாசை மனிதனை அழித்துவிடும் என்னும் படிப்பினையையும் எடுத்துரைக்கின்றது பாரதம். பெண்ணாசையை நீக்குதல் வேண்டும் என்னும் குறிக்கோளையும் பெண்ணாசை மனிதனை ஒழித்துவிடும் என்னும் நீதியையும் கூறுகின்றது, இராமாயணம். அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாக அமையும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் போற்றிப் புகழ்வர், ஊழ்வினை தவறாது வந்தடையும், என்னும் முக்குறிக்கோளைக் கொண்டு விளங்குகின்றது சிலப்பதிகாரம். இவ்வாறு ஒவ்வொரு பேரிலக்கியமும் ஏதேனும் ஒப்பற்ற குறிக்கோளைக் கொண்டு விளங்குவதைக் காணலாம்.

இலக்கியம் என்னும் சொல்லை இலங்கு இயம் என்று பிரித்துச் சிறந்த இனிய நூல் என்றும் பொருள் கொள்ளலாம். இலங்கு என்பதற்கு விளங்கு என்று பொருள்,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் - குறள் 410

என்னும் குறட்பா இந்நோக்கத்தககது. இனிமையாகச் சொல்லுதல் இயம்புதல் எனப்படும். இயம்புதல், இயம்பு ஆகிய சொற்கள் இயம் என்னும் அடிச்சொல்லிலிருந்து தோன்றியவை. எனவே, இலக்கியம் (இலங்கு + இயம்) சிறந்த கருத்தை இனிய மொழியில் உரைப்பது எனப்பொருள்படும்.

இலக்கியத்தின் பாகுபாடு :

உலகத்திலுள்ள இலக்கியங்கள் எல்லாவற்றையும் ஏட்டு இலக்கியம், மக்கள் இலக்கியம் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இது பொது பாகுபாடே தவிர வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்னும் முறையில் அமைந்த பாகுபாடு அன்று தமிழ் மொழியில் ஏட்டிலக்கியங்களாக விளங்குகின்ற உலா, தூது, கலம்பகம், பள்ளு, சிந்து, பிள்ளைத் தமிழ், பரணி, குறவஞ்சி முதலிய சிற்றிலக்கியங்களில் வாய்மொழி இலக்கியங்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. புலவர்களால் இயற்றப் பெற்று எழுத்து வடிவத்தில் ஏட்டில் காணப்படுகின்றவை யாவும் ஏட்டு இலக்கியம் எனப்படும். காப்பியம், கவிதை, கட்டுரை, புதினம், சிறுகதை, நாடக நூல், ஓரங்க நாடகம், திறனாய்வு முதலியவை ஏட்டு இலக்கியத்தின் பாற்படும். ஏட்டு இலக்கியத்தை ஒரு குறிப்பிட்ட புலவர் இயற்றியிருத்தல் வேண்டும். ஒரு வேளை அதன் ஆசிரியர் பெயர் நமக்குத் தெரியாமல் இருக்கலாம் ஒரு குறிப்பிட்ட ஆசிரியரால் இயற்றப்படாததை ஏட்டு இலக்கியம் என்று சொல்லமுடியாது. சுருங்கக் கூறுமிடத்து ஏட்டு இலக்கியம் தனி மனிதரின் படைப்பாகும்.

மக்கள் இலக்கியம் :

இரண்டாவது வகையான இலக்கியம் மக்கள் இலக்கியம் எனப்படும். இதனைப் பொது இலக்கியம், பொதுமக்கள் இலக்கியம், பாமர மக்கள் இலக்கியம், நாடோடி இலக்கியம், நாடோடிப் பாடல்கள், நாட்டுப் பாடல், நாட்டுப்புறப்பாடல்கள், (கிராமியப் பாடல்கள்), நாட்டார் பாடல், தெம்மாங்கு. வாய்மொழி இலக்கியம், எழுதா இலக்கியம் என்னும் பல பெயர்களால் குறிப்பிடலாம். இது கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் பொதுவாக இருப்பதால் பொது இலக்கியம் என்றும், பொதுமக்களிடம் சிறப்பாகக் காணப்படுவதால் பொது மக்கள் இலக்கியம் என்றும், எழுத்தறிவற்ற பாமர மக்களின் அறிவுச் செல்வமாக இருப்பதால் பாமர மக்கள் இலக்கியம் என்றும், வயிற்றுப் பிழைப்புக்காக ஊர் ஊராகச் செல்கின்ற நாடோடி மக்களிடம் பயிலப் படுவதால்

நாடோடி இலக்கியம் என்றும், இவை பெரும்பாலும் பாடல் வடிவத்தில் இருப்பதால் நாடோடிப் பாடல் என்றும், பிற நாடு களிலிருந்து கடன வாங்காமல் சொந்த நாட்டிலே தோன்றியதால் நாட்டுப் பாடல் என்றும், இப்பாடல் யாவும் நாட்டுப் புறங்களில் வழங்கி வருவதால் நாட்டுப் புறப் பாடல் அல்லது கிராமியப் பாடல் என்றும், நாட்டு மக்களால் உருவாக்கப்பட்டும் நாட்டு மக்களுக்கே உரிய இலக்கியச் செல்வமாதலால் நாட்டார் பாடல் என்றும், தென்னுட்டு மக்களின் பாங்கினை எடுத்துரைப்பதால் (தென் + பாங்கு) என்றும், வாழையடி வாழையாக வாயில் மட்டும் பயிலப்பட்டு வாய்மொழியாகவே செவிவழிச் செய்தியாக வே காலந்தொறும், இடந்தொறும் பரவி வருவதால் வாய்மொழி இலக்கியம் என்றும், ஏட்டில் எழுதாத இலக்கியமாக விளங்குவ தால் எழுதா இலக்கியம் என்றும் பல்வேறு பெயர்கள் பெற்று விளங்குகின்றது. இப்பெயர்கள் யாவும் நாட்டு மக்களுக்கும் பொது மக்கள் இலக்கியத்திற்குமுள்ள ஆழமான உறவைத் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்துகின்றன. வாய்மொழி இலக்கியம் ஆங்கிலத்தில் "Folk Song', 'Folk Poetry', 'Ballad' முதலிய பெயர்களால் குறிக்கப் பெறுகினறது.

மக்கள் இலக்கியத்தின் தொன்மை:

மக்களின் இலக்கியம் ஏட்டு இலக்கியத்தை விடத் தொன்மை யானது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஏறக்குறைய கி. மு. 5 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் 'பொருளொடு புணராப் பொய் மொழி', பொருளொடு புணர்ந்த நகைமொழி' 'பிசி', 'பண்ணத்தி', 'வாய்மொழி' என்று வாய்மொழி இலக்கியத்தைக் குறிப்பிடுகின்றுர். தொல்காப்பியர் யாப்பின் வெவ்வேறு பகுதி களைப்

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனூர் புலவர்

(தொல்காப்பியம்—பொருள்—செய்யுளியல்)

என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார் இந்நூற்பாவில் 'வாய் மொழி இடம் பெற்றிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது தொல் காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவர் பேராசிரியர். வாய்மொழிப்

பாடலுக்கு (பண்ணத்தி) உதாரணம் காட்டுமிடத்துப் பேராசிரியர் நாடகச்செய்யுளாகிய பாட்டுமடை, வஞ்சிப்பாட்டு, மோதிரப் பாட்டு, கடகண்டு முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். (தொல்—செய்யுளியல்—180). இவையாவும் பேராசிரியர் காலத்தில் நாட்டுப் பாடல்களாக வழங்கியிருத்தல் வேண்டும். பேராசிரியர் குறிப்பிட்டுள்ள வஞ்சிப்பாட்டும் இக்காலத்தில் கேரள மாநிலத்தில் வழங்கும் ஓடப்பாட்டும் ஒன்றே என்று சிலர் கூறுவர். இது மேலும் ஆராயத்தக்கது. வைகையாற்றில் நீராடச் சென்றவர்களுள் ஒரு சாரார் ஆற்று மணலில் அமர்ந்து பாடினர் என்று பரிபாடல் பாடுகின்றது.

'பாடுவார் பாக்கம் கொண்டென' — (பரிபாடல் 7-31) இவை யாவும் வாய்மொழி இலக்கியத்தில் தொன்மையை நன்கு உறுதிப்படுத்துகின்றன. வாய்மொழி இலக்கியம் எழுதா மறையாக இருந்து வந்திருக்கிறது.

ஒவ்வொரு மொழியிலும் ஏட்டு இலக்கியம் தோன்றுவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே மக்கள் இலக்கியம் தோன்றியிருத்தல் வேண்டும். ஏட்டு இலக்கியமே இல்லாத மொழியில் கூட மக்கள் இலக்கியம் இருப்பதை நாம் இன்றும் காணலாம்.

மனிதன் முதலில் பேசக் கற்றுக் கொள்கின்றுன். அதன் பின்னரே படிக்கவும் எழுதவும் கற்கின்றுன். இது தான் இயற்கையின் நியதி. அதைப் போலவே தான் மனிதன் ஏட்டு இலக்கியத்தைப் படித்தும் எழுதியும் அறிந்து கொள்ளுவதற்கு முன்னர் படிக்காமலும் எழுதாமலும் அறிந்துகொள்ளக் கூடிய வாய்மொழி இலக்கியத்தை அறிந்து கொள்கின்றுன். நாடோடிப் பாடல்கள் யாவும் மிகவும் எளிமையானவை. அன்றுட வாழ்க்கையின் ஒவ்வொரு துறையுடனும் நெருங்கிய தொடர்புடையவை. எனவே, ஆதி மனிதன் நாடோடிப் பாடல்களை மிக எளிமையாகவும் விரைவாகவும் ஆர்வத்துடனும் கற்றுக்கொண்டிருப்பான் என்று உறுதியாகக் கூறலாம். எழுத்து மொழியை விடப் பேச்சு மொழி தொன்மையாக விளங்குகின்றது என்பது தேற்றம். வாய்மொழி இலக்கியம் பொதுவாகக் கூட்டுப் பாடலாக (chorus) அமைந்துள்ளது.

சேக்சுபியர் (Shakespeare), பர்ன்ஸ் (Burns), ஸ்காட் (Scott), முதலிய மேனுட்டுப் பெருங்கவிஞர்கள் வாய்மொழி இலக்கியத்தில் பெரிதும் ஈடுபட்டவர்கள். மாத்தியு அர்னுல்டு (Mathew Arnold) முதலிய மேனுட்டு எழுத்தாளர்களின் இலக்கியங்களில் (The Ancient Mariner, The Forsaken Merman) வாய்மொழி இலக்கியக் கூறுகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

நாட்டுப் பாடல்களின் பகுப்பு முறை.

நில அடிப்படைப் பாகுபாடு : (Regional classification)

நாட்டுப் பாடல்களைப் பல்வேறு அடிப்படையில் பாகுபடுத்தலாம். நில அடிப்படையில் குறிஞ்சி (மலை) முல்லை (காடு) மருதம் (வயல்) நெய்தல் (கடற்கரை) பாலை எனப் பகுத்து நாட்டுப் பாடல்களை ஐவகையாக வகுக்கலாம். குறவஞ்சி, குறத்திப் பாட்டு முதலியவை குறிஞ்சியில் தோன்றியவை.

அத்தரு பன்னீரு எங்கே மணக்குது
அழகுள்ள வேலவர் மேலே மணக்குது
சந்தனம் குங்குமம் எங்கே மணக்குது
சண்முக வேலவர் மேலே மணக்குது

குறிஞ்சியில் தோன்றிய பாட்டுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

குறவரும் குறத்தியரும் மலை வாழ் மக்கள். குறத்தியர் குறி சொல்வார்கள். தங்கள் மலைநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்குத் தனிப் பெருமை உண்டு. அவர்களுக்குரிய நாட்டுப்பற்று போற்றுதற்குரியது. குறத்தியின் நாட்டுப் பற்றைக் காட்டுகின்ற பாடல்களில் இதோ ஒன்று —

கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு
பச்சைமலை பவளமலை எங்களது நாடு
பரமசிவன் வாழுவதும் எங்களது நாடு

குறிஞ்சிப் பாட்டுக்கு (மலை நாட்டுப் பாட்டு) இது மற்றோர் எடுத்துக்காட்டாகும். (தொடரும்)

கையறவு.

திருவாளர் செ. மு. சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் 30—3—71 இல் இவ்வுலக வாழ்வினை நீத்தார்கள். கடைசியாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நூல்கள் வெளியீட்டுத் துறையில் தலைமை அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார்கள். அவர்கள் தஞ்சை இராசராசேச்சுவரத்தில் (பெரியகோவிலில்) நிர்வாக அலுவலராகப் பணியாற்றிய போது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக ஓராண்டு தொண்டாற்றினார்கள். அவர்கள் பணியாற்றிய கோவில்களிலெல்லாம் சீர்திருத்தங்கள் பலசெய்து கோவில் பணிகள் செம்மையுற நடக்குமாறு செய்தார்கள். அவர்கள் பல நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவைகளில் பெரும்பாலானவை கோவில்களைப் பற்றியனவாகும். அன்னாரின் இன்னுயிர் இறைவன் திருவடி நிழலில் இன்புற்றிருக்க இறைவனை வணங்குகிறோம்.

பொழிற்றொண்டர்.

திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்

திருமதி. சாலினி இளந்திரையன்,
எம். ஏ., எம். லிட், டிப் - யூ. என். அய் யூ.
வேங்கடேசுவரா கல்லூரி, புதுதில்லி.

திரு வி. கலியாணசுந்தரனரின் "வாழ்க்கைக் குறிப்புக்கள்" தமிழில் உள்ள தன்வரலாற்று நூல்களில் தனிச்சிறப்புக்கு உரிய ஒரு புத்தகம். 26—8—1883ல் பிறந்து 17—9—1953ல் காலஞ் சென்ற தமிழ் முனிவர் திரு. வி. க. வின் வரலாற்றைக் கூறுவதோடு, இந்த நூற்றாண்டின் முற்பாதியில் நிகழ்ந்த அரசியல். பத்திரிகை, சமயம், தொழில் இயக்கம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட பெரிய மாறுதல்களையும் இந்நூல் விரிவாக விளக்கி விவரிக்கிறது. மேலே குறிப்பிட்ட பல துறைகளிலும் சிறப்புக்கு உரியவராகவும் தூய வாழ்வினராகவும் விளங்கிய தமிழ் முனிவரின் வாழ்க்கை வரலாறு, அவரே குறிப்பிட்டிருப்பது போல, "நல்லன கொண்டும் தீயன விலக்கியும் மற்றவர் வாழ்தற்கு ஓரளவிலாதல் துணைபுரியும்" என்பது உண்மையே. [1]

1. 1. "தம் வாழ்வையே திறனய்வு செய்யும் விருப்பம், நடந்துபோன நிகழ்ச்சிகளை நினைவு கூர்வதால் ஏற்படும் ஓர் இன்பம், தமது வாழ்வு பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கக் கூடும் என்னும் எண்ணம், குழப்பம் மிகுந்த உலக வாழ்வில் தம்மைத் திறனய்வு செய்து சீர்செய்து கொள்ளும் விழைவு, தமது கொள்கைகளும் நடைமுறைகளும் சரியானவையே என்று விளக்கி நிலைநாட்டும் வேட்கை முதலானவற்றுள் ஒன்ருே சிலவோ, ஒருவர் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதப் புகுவதற்குக் காரணமாகலாம்" என்று குறிப்பிடுகிறது பிரிட்டானியக் கலைக்களஞ்சியம். [2]

1. 2. இந்தத் தன்வரலாற்று நூலில் வரும் சில குறிப்புக்கள், தமது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஒரு சிலவற்றுக்குத் திரு. வி. க. தந்துள்ள முக்கியத்துவம் அவரைப் பற்றி அவருக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்த சில அறிஞர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் முதலியவற்றைக் கொண்டு பார்க்கையில்,

---

1 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை, (1969 பதிப்பு), பக்கம். 7

2 Encyclopedia Britanica, Vol. II: Chicago. (1959) Page. 783

தமது வாழ்வின் பல கூறுகளைப் பற்றிப் பலரிடையே நிலவி வந்த தவறான எண்ணத்தை விலக்குவதற்காகவே இவர் இந்தக் குறிப்புக்களை எழுத முனைந்திருப்பார் போலத் தோன்றுகிறது.

1. 3. அவர் ஈடுபட்ட துறைகள் ஒவ்வொன்றிலுமே திரு. வி. க. மேற்கொண்ட நெறி ஒருவிதமாக இருந்தது; இவர் காலத்து மற்றவர்கள் மேற்கொண்ட போக்கு, அதற்கு மாறுபட்ட விதமாக இருந்தது. அவர் மேற்கொண்ட ஒரு விதமான பொதுமை நெறி பலருக்கு விளங்காத புதுமையாக இருந்தது. அதனால் "பலர் அவரைப் பழித்தனர்; பழிக்காதவரும் வெறுத்தனர்; வெறுக்காதவரும் ஐயுற்றனர்" [3]

1. 4. இந்த அய்யப்பாடுகள், வெறுப்புக்கள் பற்றியோ அவற்றின் விளைவான தாக்குதல்கள் பற்றியோ திரு வி. க. அந்த நாளில் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை [4] ஆயினும். பத்திரிகை உலகு, அரசியல் உலகு, தொழிலாளர் இயக்கம் முதலியவற்றோடு இயைபு கொண்ட தமது வாழ்க்கைக் குறிப்புக்களை விவரித்து வரும் திரு. வி. க., தம்முடைய கொள்கைகளையும் செயல்களையும் விளக்கி நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடுவது, பல இடங்களிலும் தெளிவாகவே புலப்படுகிறது;

2. 0. சற்றேறக்குறையத் தமது பதினெட்டாம் வயதில் அரசியலுள் ஈர்க்கப்பட்ட திரு. வி. க., கடைசிக்காலம் வரையில், ஏதாவது ஒரு வகையில், அரசியல் தொடர்பு உடையவராகவே இருந்தார். இதனை (1944ல்), 'இன்னும் என் வாழ்க்கை அரசியலை விடுக்கவில்லை; சன்மார்க்க அரசியல் அரசியல் என்று நெஞ்சம் உருமுகிறது' என்று குறிக்கிறார் திரு. வி. க. [5]

2. 1. காஞ்சிபுரத்தில் 1925ல் நடந்த தமிழ் மாகாணக் காங்கிரசு மாநாடு தமிழ்நாட்டுக் காங்கிரசு இயக்கத்தில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. மாநாட்டில் கொண்டுவரப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தைத் தலைமை வகித்த திரு. வி. க. ஏற்கவில்லை. அதன் காரணமாகப் பெரியார் ஈ. வெ. இராமசாமியும் மற்றுஞ் சிலரும் காங்கிரசை விட்டு வெளி

---

3 டாக்டர் மு. வரதராசன்: திரு. வி. க., சென்னை, (1962), பக்கம், 45—47

4 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், சென்னை, (1969 பதிப்பு), பக்கம், 431

5 451

யேறினர். இந்த வெளியேற்றத்துக்கு இவரே காரணம் என்னும் கருத்து தலைவர்களாலும் சில பத்திரிகைகளாலும் அப்போதே பரப்பப்பட்டது.[6] இந்த நிகழ்ச்சியில் தமது நிலை சரியே என்பதை மிக விரிவாக, சுமார் 34 பக்கங்களில் விளக்கி வலியுறுத்தியுள்ளார் திரு. வி. க.[7]

2. 2. காந்தி அடிகளையும் காரல் மார்க்சையும் இணைத்துத் திரு. வி. க. பேசிவந்த அரசியலும், பலரிடம் அவர் மீது அய்யத்தையும் அவநம்பிக்கையையுமே எழுப்பியது. அதற்கும் பல இடங்களில் விளக்கம் தந்துகொண்டே செல்கிறார் அவர்: ''சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கம் தேடவே யான் மார்க்சின் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறுகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை''[8]

2. 3. மற்ற அரசியல்வாதிகள் மார்க்சியத்தை விளங்கிக் கொண்ட முறைக்கும் திரு. வி. க. அதை விளங்கிக் கொண்ட முறைக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. மார்க்சியம் நாத்திகக் கோட்பாடு உடையது என்று பலர் கருதினர்; திரு. வி. க. விடமே பலர் இப்படிக் கேட்டதும் உண்டு அதற்கு அவர் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார்: 'மார்க்சியம் பொருட் பொதுமையை அறிவுறுததும் நாத்திகமன்றோ?'' என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்சியம் என்று சிலர் நாத்திகப் பிரசாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனத்துக்கு மார்க்சியம் நாத்திகமாகத் தோன்றவில்லை. மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறித்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அகிம்சையும், கிருட்டிணன் நிட்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக்கின்றன. அவைகள் யாவை சாம்ராச்சியங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்க வொழுக்கங்கள் முதலியன. இவைகளைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி வேற்றுமை, இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட்பொதுமை பொருட்பொதுமை, மகம்மதுவின் தெய்வ ஒருமையும் கிறித்துவின் அன்பும் பிறவும் மன்பதையில் கால்

---

6 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் சென்னை (1969 பதிப்பு) பக்கம் 370—373
7 ... ... 350—383
8 582

கொள்வதற்குத் துணைசெய்யும் ஆற்றல் வாய்ந்தது என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.[9] அவருடைய வாழ்க்கைக் குறிப்பில் உள்ள பின்வரும் பகுதி (இதுபற்றிய) அவரது நிலையை மேலும் விளக்குவதாக உள்ளது: "இக்கால உலகம் (சத் என்னும்) கடவுளையும் (மார்க்கம் என்னும்) இயற்கையையும் ஒரு சேரக் கொண்ட சன்மார்க்கத்தை விரும்புகிறது. அவ்விருப்பம் சீர் திருத்த நாட்டத்தை எழுப்பியுள்ளது. சீர்திருத்தத்தில் தலைப் பட்ட யான் முன்னோர் கருத்துக்களைத் தழுவி, என் கல்வி கேள்வி ஆராய்ச்சி அநுபவம் முதலியவற்றைக் கொண்டும் ஆண்டவன் அருளை முன்னிட்டும், காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்ற முறையில் அக்கருததுக்களை ஒழுங்குசெய்ய முயன்றேன்"[10]

3. 1. இந்தியாவிலேயே முதன்முதலில் சென்னையில் தான் தொழிலாளர் இயக்கம் தோன்றியது. அதற்கு மூல காரணமானவர்களில் திரு. வி. க. வும் ஒருவர். ஆயினும் இந்த இயக்கம் பற்றிய "வரலாறுகளில் ஆரம்ப நிகழ்ச்சிகள் சில திரிபாக எழுதப்பட்டுள்ளன; சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகள் சில விடப்பட்டுள்ளன" என்னும் குறிப்புடனேயே திரு. வி. க (தமது வாழ்க்கைக் குறிப்புக்களில்) "தொழிலாளர் இயக்கம்" என்னும் பகுதியைத் தொடங்குகிறார். தொழிலாளர் இயக்கத்தின் தோற்றத்துடன் வாடியா, மிருநாளினி சட்டோபாத்தியாயா, பெசன்ட் அம்மையார் போன்றவர்களின் பெயர்களே பெரிதும் பேசப்படுவது வழக்கம், ஆனால், உண்மையில் மத்தியத் தொழிலாளர் சங்கம் என்னும் கூட்டமைப்பு (வாடியா சென்னையில் இல்லாத சமயத்தில்) 1920 ஜூலை 4ல் தொடங்கப்பட்டது; திரு வி. க. வே அதன் முதல தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்[11] "ஆரம்ப நிகழ்ச்சிகள் திரிபாக எழுதப்பட்டுள்ளன" என்று அவரே குறிப்பிட்டுள்ள மற்ற வரலாறுகளில் ஏறிய குற்றத்தைப் போக்கவே மேலே கண்ட நிகழ்ச்சியைத் திரு. வி. க. விவரமாகத் தந்துள்ளார் என்று தெரிகிறது.

3 2. தொழிலாளர் இயக்கத்தின் தொடக்க கால நிகழ்ச்சிகளில் 1921ல் தோல்வி கண்ட பி அண்டு சி மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் மிக முக்கியமானது அந்த நாட்களில், தொழி

---

9 திரு. வி க, வாழ்க்கைக் குறிப்புக்கள். சென்னை, (1969), பக்கம், 580—581
10 ... ... 645—46
11 ... ... 463—64

லாளர் சங்கத் தலைவராக இருந்த திரு: வி. க. வே இத்தோல்விக்குக் காரணம் என்று பலர் பேசி இருப்பார்கள் என்பது இயல்பே. இது பற்றிய உண்மை நிலை வெளிவரவில்லை என்று நினைத்தவர் போலவே திரு. வி, க. இந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுதியுள்ளார். சுமார் 16 பக்க அளவில் விவரித்துள்ள இந்த நிகழ்ச்சி, வேலை நிறுத்தத்தின் தோல்விக்கான காரணங்களை மிக விரிவாக ஆராய்கிறது, அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எதிராக இருந்தது. தொழிலாளர்களிடையே சாதிப்பூசலை உண்டாக்கி (எம். சி. ராசா என்பவரின் துணையுடன்) அவர்களைப்பிரித்தது முதலான செய்திகள் விவரமாகத் தரப்பட்டுள்ளன. இதற்கு ஆதாரமாகச் சட்டசபை (நீதிக் கட்சி) உறுப்பினர் தணிகாசலம் செட்டியார் (12—10—1921ல்) நிகழ்த்திய நீண்ட (சட்டசபைச்) சொற்பொழிவு முழுமையாகத் தரப்பட்டுள்ளது.[12] "மில்லில வேலை செய்யும் ஆதிதிராவிடர்களும் இந்துக்களும் முகம்மதியர்களும் தொழிலாளர் சங்கத்து அங்கத்தவர் என்ற முறையில் ஒன்றுகூடி ஒற்றுமையாய் இருந்து வந்தார்கள். சாதி வித்தியாசங்களை வேலைநிறுத்தத்தில் புக விட்டு வேலை நிறுத்தத்தை ஒழிக்க (அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது" என்னும் குறிப்பு (திரு. வி. க. வின் கருத்துக்கு ஆதரவான குறிப்பு) இச்சொற்பொழிவில் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது [13]

3. 3. இந்த வேலை நிறுத்தத்தின் போது ஆதிதிராவிடர்களைத் தனிப்பிரித்தவர் எம். சி ராசாவே என்பது ராவ்பகதூர் மதுரைப்பிள்ளை என்பவர் கூற்றுல் வலியுறுத்தப்படுவதோடு,[14] எம். சி. ராசாவே (பின்னர்) தமது செயலின் தவற்றை ஒருவாறு உணர்ந்து பேசியதாகவும் கூறப்படுகிறது [15]

4. "சமயமும் சன்மார்க்கமும்" என்னும் பகுதியில், நம்முடைய சமய நெறியை அறியாதவர்களை நோக்கிக் கேட்பது போல, "என் வாழ்வில் சமயம் எப்படி இயங்குகிறது?" [16] என்னும் வினவை அவரே எழுப்பிக்கொண்டு, ஒரு நூறு பக்க அளவில் அதற்கு விளக்கம் தந்துசொல்கிருர் திரு. வி- க. இந்த நூறு பக்கங்களுள் சைவம், சைநம், பௌத்தம், இசுலாம்.

---

12 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் சென்னை (1969) பக்கம் 559—567
13 560
14 ... ... 570—571
15 ... ... 575—576
16 586

கிறிசுதவம், வேதாந்தம், பாரசீயம், சன்மார்க்கம் முதலியவற்ரேடு தமக்கு முறையே ஏற்பட்ட தொடர்புகளை எல்லாம் விவரித்து வருகிருர். இறுதியில், "சைவம் அளித்த சமரசக் கண்ணுககு மற்றச் சமயங்களும் சமரச சன்மார்க்கமாகவே புலப்படும்"[17] என்று கூறி முடிக்கிருர். இந்த நூறு பக்க விளக்கம் அவருடைய புதிய சமயப் பொது நெறியின் விளககமாகவே அமைந்துள்ளது.

5. 1. பத்திரிகைத் துறையில் அருஞ்சாதனைகள் நிகழ்த்திய தமிழ்நடை பற்றியும் தவருன கருத்தே பரவியிருந்தது. அதனை, "மொழிநடைப் பற்றிய போராட்டம்" என்றே குறிப்பிடுகிருர், திரு. வி. க.[18] 1917ல் அவர் தேசபக்தன் இதழைத் தொடங்கினுர். அந்த இதழில் எழுதுவதற்கு ஒரு புதிய தமிழ்நடையை அவர் கையாண்டார். தமிழகத்தார் அந்நடையை விரைந்து ஏற்றுக்கொள்ளவில்லை. "இலக்கணத்தை விடாத பண்டிதர் அவர் என்று சிலர் பழித்தனர்; இலக்கணம் அறியாத எழுத்தாளர் அவர் என்று சிலர் வெறுத்தனர்.[19] அப்போது, திரு வி க, "செவ்விய தமிழ்நடை தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாதென்று கருதித் "தேசபக்த" னுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரை நடையைக்கொண்டுள்ளேன்" என்றே எழுதினுர்.[20] ஆனுல் நாளடைவில், அதுவே தமக்கு உரிய நடை என்பதை உறுதிசெய்து கொண்டார். அதையே வாழ்க்கைக் குறிப்புகளிலும் வலியுறுத்துகிருர்: "என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது; இன்னென்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்ரென்று பத்திரிகை உலகை அடைந்த நாளில் அமைந்தது. இறுதியதே எனக்கு உரியதாய்—உடையதாய் நிலேத்தது.[21]

---

17 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் சென்னை (1969), பக்கம், 684

18 144

19 டாக்டர் மு. வரதராசன்: திரு. வி, க. சென்னை, (1962), பக்கம், 46

20 திரு' வி. க: தேசபக்தாமிர்தம், சென்னை, (1919), முன்னுரை

21 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை (1969), பக்கம், 144

5. 2. மேலும், "யான் தமிழ்ப் போதகாசிரியனாயிருந்தவன். இப்பொழுது தமிழ் பத்திரிகாயாசிரியனானேன். 'தேசபக்த' னுக்கென்று ஒரு தனிநடை கொண்டேன். சிறுசிறு வாக்கியங்கள் அமைக்கலானேன். எளிமையில் கருத்துக்கள் விளங்கும் முறையைப் பற்றினேன். அந்நடையை நாடோறும் எழுதி எழுதிப் பண்பட்டமையால் அதுவே எனக்குரிய இயற்கையாகியது."[22] என்று தம் நிலையைத் தெளிவுபடுத்தி, "(மொழி நடையைப் பற்றிய) போராட்டம் பொருளற்றதென்பது எனது உள்ளக் கிடக்கை ... ... மொழிநடை (யும்) அவரவர் இயற்கைக்கேற்ற வண்ணம் அமையும். இயற்கை அமைவைக் குறித்துப் போராட்டம் எற்றுக்கு?" என்று முடிக்கிறார் திரு. வி. க.[23]

6. 1. எனது வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் வேண்டும் என்னும் எண்ணம் அணித்தே என்பால் எழுந்தது"[24] என்று 1944ம் ஆண்டில் குறிப்பிடும் திரு. வி. க.. வாழ்க்கைக் குறிப்புக்களின் தோற்றுவாயில், "தன் வரலாற்றைத் தானே எழுதுவதைப் பல ஆண்டுகளாக யான் வெறுத்து வந்தேன். அதில் முன்னோர் வழியைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்ற எண்ணமுடையவனாகவே இருந்தேன். அணித்தே நேர்ந்த சில நிகழ்ச்சிகள் என் மனோநிலையை மாற்றின. காலதேச வர்த்தமான வேகத்துக்கு இரையாகும் நிலைமை எப்படியோ நேர்ந்துவிடுகிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.[25] தமது நெடுநாளைய முடிவை மாற்றிக்கொள்ளும்படியான ஒரு கட்டாயம் பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்டது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது மேலும், தமது பிள்ளைமை பற்றி எழுதிவரும் திரு. வி. க. ஓரிடத்தில், பின்வருமாறு கூறுகிறார் : "ஒருவனது வாழ்க்கை மரம் இப்படித்தான் வளரும் என்று கருவிலேயே அதற்குரிய விதை விழுமோ என்னவோ தெரியவில்லை. விதை நேரே வளர்தலுமுண்டு; தூறி விடப்பட்டு வளர்தலுமுண்டு. பின்னையதில் உலகுக்குப் புலனாவது எது? தூறு; இதனைவிட விதை முளைவிட்டு வளர்ந்து வருதல் பெரிதும் புலனாவதில்லை. அதனால் உலகம் மயக்குறு

---

22 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் சென்னை (1969 பதிப்பு), பக்கம், 267

23 144

24 ... ... முன்னுரை, பக் 5

25 ... ... பக்கம், 7

கிறது ; பல காரணங் கற்பிக்க முயலுகிறது.[26] தமது வாழ்க்கை நிகழ்ச்சிகள் மற்றவர்களால் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை என்று அவர் கருதியதே இந்தக் குறிப்புக்குக் காரணமாகத் தோன்றுகிறது.

6. 2 இதுகாறும் எடுத்து விளக்கியவற்றால், தமது கடந்த கால வாழ்க்கையைப் பற்றிப் பிறரிடம் நிலவிய தவறான எண்ணங்களை நீக்குதல் வேண்டும் என்று எழுந்த உணர்ச்சியே திரு. வி. க. தமது வாழ்க்கைக் குறிப்புக்களை எழுத முற்பட்டதற்குக் காரணம் என்பது தெளிவாகிறது.

(1970ல் திருச்சியில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 2-வது கருத்தரங்கு மாநாட்டில் வழங்கிய ஆய்வுரை)

---

26 திரு. வி க. வாழ்க்கைக் குறிப்புகள், சென்னை, (1969), பக்கம், 94

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், ஒரு மொழி அதைப் பேசும் மக்களின் மதிநுட்பம், பண்புகள், மரபுகள் முதலியனவற்றின் அடிப்படையில் வளர்ந்து வருவது. பிறமொழிச் சொற்களைத் தாராளமாக ஏற்றுக்கொண்டால்தான் தமிழ் மொழி வளருமென்று எண்ணினால் நாளடைவில் தமிழ் தமிழ் மொழியாயிராது. வேறோர் உருப்பெற்றுக் கலப்பு மொழியாகத்தான் நிலவும். அக்கலப்பு மொழியில் தமிழ் மக்களின் மதிநுட்பம் பண்புகள் தமிழ் மொழியின் இனிமை யாவும் மறைந்து போகும்

சுருங்கக் கூறின் தமிழ் மொழி அதன் உயரிய பண்புகளாகிய தனிமை, இனிமை, செம்மை ஆகியவற்றுடன் வளரப் பல முயற்சிகள் வேண்டும். அம்முயற்சிகளில் ஒன்று எல்லாத் தமிழரும் அன்றாட வாழ்க்கையில் கனியிருப்பக் காய் கவராது பிறமொழிச் சொற்களில்லாமல் இனிய தமிழ்ச் சொற்களைப் பேசியும் எழுதியும் வருதல் வேண்டும். இந்த முயற்சியில் ஒரு பணியாகப் பொது மக்கள் அன்றாட வாழ்க்கையில் பேசியும் எழுதியும் வரும் பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் தமிழ்ப் பொழிலில் ஒவ்வொரு திங்களிதழிலும் சிலவற்றை வெளியிட்டு வரக் கருத்துடையோம்.